JUDICIAL FORM NO.53
(See Rule 42)
DEPOSITION OF WITNESS
(Chapter XXII, Cr.P.C)
IN THE COURT OF THE JUDICIAL MAGISTRATE COURT, BHAVANI

Deposition of LW- - Pw-4 Witness
for Prosecution

| CC.No. | 15/2024 | Crime No. | 163/2023 | Station | Appakodal |
|---|---|---|---|---|---|

| Name | **Pw.4-குப்புசாமி** | Village |
|---|---|---|
| Father's Name/Husband's Name | | Taluk |
| Age | | Calling |
| Solemnly affirmed in accordance with the provisions of the Oaths Act, 1969 (Central Act 44 of 1969 on the 20th day of February 2026 | | |

**எதிரி ஆஜர் இல்லை. எதிரி தரப்பில் மனு தாக்கல் செய்யப்பட்டு, அனுமதிக்கப்பட்டது**

**முதல் விசாரணை**

நான் தற்போது நல்லாநாயக்கனூரில் குடியிருந்து கொண்டு, விவசாயம் செய்து வருகிறேன். இந்த வழக்கு பற்றி எனக்கு எதுவும் தெரியாது. தற்போது என்னிடம் காட்டப்படும் பார்வை மகசரில் உள்ள முதலாவது சாட்சி கையொப்பம் என்னுடையதுதான். கடந்த 3 வருடங்களுக்கு முன்பு ஒரு நாள் மாலை 05.00 மணிக்கு போலீசார் சுக்காநாயக்கனூர் அருகில் விபத்து நடந்தது சம்பந்தமாக அங்கு வந்து விசாரித்தார்கள். அதற்கு சாட்சியாக போலீசார் கையெழுத்து கேட்டார்கள். நான் போட்டுக் கொடுத்தேன். என்னிடம் காட்டப்படும் பார்வை மகசரில் உள்ள முதலாவது சாட்சி கையொப்பம் என்னுடையது தான். **பார்வை மகஜர் அ.சா.ஆ.2 ஆக குறியீடு செய்யப்படுகிறது.** இந்த வழக்கு சம்பந்தமாக போலீசார் என்னை விசாரிக்க நடந்த விவரங்களை சொன்னேன்.

**எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை**

நான் கையொப்பம் செய்த தாளில் என்ன எழுதியிருந்தது என்கின்ற விவரம் எனக்கு தெரியாது என்றால், சரிதான். நான் மேற்படி கையொப்பத்தை காவல் நிலையத்தில் வைத்து தான் செய்தேன் என்றால், சரியல்ல. நான் முதல் விசாரணையில் சொல்வது போல், சொன்ன நேரத்தில், சொன்ன விதத்தில் எந்த ஒரு ஆவணத்திலும் கையொப்பம் செய்யவில்லை என்றாலும், போலீசார் கேட்டுக் கொண்டதற்கிணங்க காவல் நிலையத்தில் வைத்து கையொப்பம் செய்துவிட்டு சம்பவயிடத்தில் வைத்து கையொப்பம் செய்ததாக பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால், சரியல்ல.

**மறு விசாரணை இல்லை**

Signature of Witness

Taken down before me in open court
readover to the witness in the presence
of the accused pleads and admitted by
him/her to be correct

RAJKUMAR J
Digitally signed by RAJKUMAR J
Date: 2026.02.20 06:05:58 +0530

Sd/- (J.RAJKUMAR)
Judicial Magistrate No.1, Bhavani